**சுருக்கம்**

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் - 2005-2006ம் ஆண்டு பகுதி –II திட்டம் - ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் சார்ந்த கல்வி தொலைக்காட்சி படப்பதிவு நிலையத்திற்கான கணினி வன்பொருள் - செலவினம் அனுமதித்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (யு2)த் துறை**

அரசாணை (நிலை) எண். 63
நாள்: 16.05.2005

**படிக்கப்பட்டவை**

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், கடிதம் Rc.No.14879 / B2 / 2004 நாள் 6.1.2005.

-----

**ஆணை:**

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தைச் சார்ந்த கல்வி தொலைக்காட்சி படப்பதிவு நிலையத்திற்கு தற்போது உள்ள கருவிகளும், வசதிகளும், நவீன தேவைகளை நிறைவு செய்ய போதுமானதாக இல்லை என்றும், எனவே கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையத்தில் உள்ள ஒலிப்பதிவு கூடம் மற்றும் ஒளிப்பதிவுக் கூடம் ஆகியவற்றில் சில வன் மற்றும் மென்பொருள் தொகுப்புகளை ரூ.31.50 இலட்சம் செலவில் வழங்கி மேம்படுத்த ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் மேற்படி கருத்துருவை 2005-2006ம் ஆண்டிற்கான பகுதி -II திட்டத்தில் அரசு பரிசீலித்து அதனை ஏற்றுக் கொண்டது. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கு கல்வி தொலைக்காட்சி படப்பதிவு நிலைய மேம்பாட்டிற்கான கணினி வன்பொருள் செலவிற்காக பின்வரும் இனங்களுக்காக ரூ.31.50 இலட்சம் (ரூபாய் முப்பத்தொன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தொடரா செலவினமாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது:-

1). வீடியோ தயாரிப்புக்கானவை

| வ. எண் | கருவிகளின் விவரம் | எண்ணிக்கை | உத்தேச மதிப்பீடு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பீட்டா வீடியோ ஒளிப்பதிவு கருவிக்கான ரிமோட் யூனிட் | 1 | 3.5 |
| 2 | இணைப்பானுடன் கூடிய இன்ஃபோ லித்தியம் பேட்டரி மின்னேற்றி | 2 | 1.25 |
| 3. | எல்.சி.டி. வீழ்த்தி திரையுடன் | 1 | 1.30 |
| 4. | டி.வி.டி/பதிவான் | 1 | 0.25 |
| 5. | விளக்கு தாங்கிகள் | 4 | 0.20 |
| 6. | 29" வண்ண தொலைக் காட்சிப் பெட்டிகள் டிவிடி இணைப்புகளுடன் | 2 | 0.70 |
| 7. | டிவிடி இயக்கி | 1 | 0.25 |
| 8. | டெம்போ டிரேவலர் ஊர்தி அல்லது அதற்கு இணையானது (equivalent) | 1 | 6.00 |

2) ஆடியோ தயாரிப்புக்கானவை

| | | | |
|---|---|---|---|
| 1 | டிஜிட்டல் பல்தட 24/96 வசதியுள்ள ஒலிக்கலவை இயக்கி அலகு | 1 | 3.00 |
| 2 | டிஜிட்டல் கணினி சார்ந்த ஒலிப்பதிவுக்கான பணி நிலையம். வன்தட்டு வசதி / ரேடியோ பொருத்தக்கூடிய இணைப்பான், கணினி திரை மற்றும் ஒலிப்பான்களுடன் | 1 | 7.00 |
| 3 | தடையில்லா மின்சாரம் வழங்கும் கருவி (30 நிமிட நிறுத்தும் திறனுடன்) | 1 | 0.50 |
| 4 | ஆடியோ குறுந்தகடு மூல நாடா மற்றும் ஒலி நாடா தயாரிக்கும் எந்திரம் | 1 | 0.50 |
| 5 | எட்டு தட டிஜிட்டல் முறையில் பதிவு செய்யும் கருவி 24 செயல் அலகு வசதியுடன் | 1 | 3.00 |
| 6 | 29" வண்ண தொலைக் காட்சிப் பெட்டி ஒன்றும் மற்றும் 14" வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி | 2 | 0.35 |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்றும் | | |
| 7 | சிறப்பு ஒலிகள் கொண்ட குறுந்தகடு வங்கிகள் | 1 தொகுப்பு | 0.10 |
| 8 | இயக்கி அலகுகள் மற்றும் பிற கருவிகளை நிறுவத் தேவையான மரத்திலான தளவாட அமைப்புகள் | 1 | 0.10. |

3) பொது

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1 | குடம் அமைப்பிலான, பிளாஸ்டிக்கிலானகுளிரூட்டும் கோபுரம் | 1 | 1.50 |
| 2 | பகுப்பு முறை குளிர் சாதனப் பெட்டி (1.5 டன்) | 4 | 2.00 |

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது:-

"2202 பொதுக் கல்வி - 02 இடைநிலைக் கல்வி 004 ஆராய்ச்சியும் பயிற்சியும்-I திட்டத்தில் சேராதது -AB தமிழ்நாட்டில் தொலைக்காட்சி வழி கல்வி திட்டம் - 76. கணினியும் துணைப் பாகங்களும் 01 வாங்குதல் (த.தொ.கு. 2202 02 004 AB 7610)"

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.20936/Edn.I/2005 நாள் 18.4.2005-ல் பெறப்பட்ட அத்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,

அரசு

செயலாளர்.

பெறுநர்

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.

நகல்:

நிதித் (கல்வி-I) துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித் (பட்ஜெட்) துறை, சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

அரசு சார்புச் செயலாளர்.